ආයතනයේ නම :- වරාය හා නාවික හා ගුවන්සේවා අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 ( 4 ) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

நிறுவனத்தின் பெயர் :- துறைமுகங்கள்இ கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

பாராளுமன்றத்தில் அரசாங்க கணக்குகள் தொடர்பான குழு நிலையினால் அட்டவணைப்படுத்தப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் நிலையியற் கட்டளை இல 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றில் சமர்ப்பித்தல

Name of the Institution: -The Ministry of Ports, Shipping & Aviation

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No.119(4)

பாராளுமன்றத்தில் அரச கணக்குகள் தொடர்பான குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இல. 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் கண்காணிப்பு மற்றும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டு தொகுப்பு இல. 183

நிறுவனத்தின் பெயர் -துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

| | **குழுவினால் அடையாளங் காணப்பட்ட குறைப்பாடுகள்** | **குறைப்பாடுகளை சீர்செய்வதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை/ தற்போதைய நிலை** |
|---|---|---|
| 01 | 2016.12.29 ஆம் திகதிய இல 2016/30 ஆம் அரச நிருவாக சுற்றறிக்கை 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் பிரகாரம் நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பாவனை தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி சட்டதிட்டங்கள் மற்றும் செயலாற்றுகை தொடர்பான ஏற்பாடுகளுக்கு இணங்கும் சதவீதம் தொடர்பான குறித்த செயலாற்றுகை கணிப்பீடு தொடர்பாக இல 2016/30 ஆம் அரச நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் பிரகாரம் நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பாவனை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லையென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இல 2016/30 ஆம் அரச நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக நிறுனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் பாவனை தொடர்பான விசாரணையொன்று 2020 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டதுடன், நடைமுறையிலிருந்த எரிபொருள் நெருக்கடி காரணமாக வாகனங்களின் எரிபொருள் தாங்கிகளை முழுமையாக நிரப்புவதற்கு முடியாதிருந்ததன் காரணமாக 2021 மற்றும் 2022 ஆம் வருடங்களில் மேற்குறிப்பிட்ட எரிபொருள் விசாரணையை உரிய முறையில் முன்னெடுக்க இயலவில்லை. அவ்வாறாயினும், எரிபொருளை மீண்டும் வழங்குவதற்கு முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் அனுகூலமான மட்டத்தை எட்டியுள்ளமையால் 2023 ஆம் ஆண்டில் அமைச்சின் வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு தொடர்பாக விசாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக மேலும் குறிப்பிடுகின்றேன். |
| 02 | நிதி ஒழுங்கு விதி 94 (1) அமைவாக செலவு விடயத்திற்கு வழங்கப்பட்டிருந்த முன் ஒதுக்கீடுகளை பயன்படுத்தியதன் பின் எஞ்சிய ஒதுக்கீட்டு எல்லை அனுமதிக்கப்பட்ட எல்லையை தாண்டியவாறு தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. | ஒதுக்கீடுகள் இன்மையால் ஒப்பந்தக்காரருடன் சேவை வழங்கும் வெளி தரப்பினர்களுடன் அவ் வரவுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நிதி ஒழுங்கு விதி 94(1) ற்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| 03 | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் | 2022.12.31 ஆம் திகதிக்கு அறவிடப்பட |

| | | |
|---|---|---|
| | முதல் தொடரும் கடன் நிலுவை இருந்தது | முடியாதிருந்த இடமாற்றம் பெற்று சென்றுள்ள திகதி உறுதியாக குறிப்பிடப்படாத இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்ள வேண்டிய ரூபா 119,200.00 கடன் நிலுவை 1990 வருடங்கள் வரை பழமையானது. இக்கடன் நிலுவையை அகற்றுவதற்கு அரச நிதி திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்ததுடன், அதன் பரிந்துரைகளிற்கேற்ப கடன் நிலுவையை அகற்றுவதற்கு குழுவொன்றை நியமித்து காரணிகளை ஆராய்ந்து குழு அறிக்கையை 2019.10.18 ஆம் திகதி சமர்பிக்கப்பட்டுள்ளது.<br><br>பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள திரு. ஜே.ஜி.ஆரியரத்னவிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.293,470.00 கடன் நிலுவை அவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் உயர் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் உத்தியோகத்தர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு 2022.03.08 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டதுடன், அதன் தீர்ப்பின் மூலம் அவர் குற்றவாளியென அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் கடன் நிலுவையை திருப்பி செலுத்த வேண்டுமென 2022.08.26 மற்றும் 2022.11.29 ஆம் திகதிகளில் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 04 | நிதி ஒழுங்குவிதி 371 இன் அடிப்படையில் வெளியிடப்பட்ட விசேட இடைக்கால சிறு நிதி செயற்பாடு நிறைவடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. நிதி ஒழுங்குவிதி 371 இன் எல்லையை கடந்து விசேட இடைகால நிதி வழங்கப்பட்டிருந்தது. | நிதி ஒழுங்குவிதி 371 இன் அடிப்படையில் விசேட இடைக்கால சிறு நிதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| 05 | குடிமக்கள்/ வாடிக்கையாளர் சாசனம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>நிறுவனத்தின் குடிமக்கள்/ வாடிக்கையாளர் சாசனம் அமுல்படுத்துவது தொடர்பாக கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு தொடர்பாக நிறுவனத்தினால் செயல்முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை ஒட்டுமொத்த பணிக்குழுவினர் உள்ளடங்கலாக செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.<br>திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த பயிற்றுவிக்கும் சந்தர்ப்பங்களின் பரிமாணம் 50% ஐ விட குறைந்த மட்டத்தில் இருந்தது. | இவ்வமைச்சின் குடிமக்கள்/ வாடிக்கையாளர் சாசனம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு அனைத்து பிரிவுகளுக்கும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அந்த சாசனம் அமுல்படுத்துவது குறித்த சேவைகளை மிகவும் ஆக்கபூர்வமாகவும் தரமானதாகவும் வழங்குவதனை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு குழுவொன்றினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பதை தயவுடன் குறிப்பிடுகின்றேன். மேலும், சாசனத்தை நிறுவனத்தினுள் எதிர்பார்த்த பொதுமக்கள் சேவைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்துள்ளதா என்பது தொடர்பாக காலாண்டு ரீதியாக மதிப்பீடு செய்து அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதனை மேலும் குறிப்பிடுகின்றேன். |

K.D.S. Ruwanchandra
Secretary
Ministry of Ports, Shipping & Aviation
No. 19, Chaithya Road, Colombo 01. Sri Lanka.